Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக. சங்.20:4 ஆகஸ்ட் 2023 No.8

"உங்கள் ஆண்டவர் வருகிறார்..எனவே விழித்திருங்கள்..."

"Watch therefore... Your Lord cometh..."

B.W. Miller and G.F. Owen

தூய ஆவியானவர் பரிசுத்தவான்களைத் தமது இரண்டாம் வருகையைக் குறித்து முழுமையாகத் தூண்டியதால் புதிய ஏற்பாடு அதிகமாக இரட்சகரின் வருகையைக் குறித்து குறிப்பிடுகிறது. விழித்திருப்பதின் அதிமுக்கியத்துவத்தை வலியுறுத்த இயேசு விரும்பிய போது அவரது உரையாடல்களில் அவரது விரைவான மின்னல் போன்ற வருகையோடு இணைத்துக் கூறினார். கிறிஸ்து மறுபடியும் வருகிறார் என்ற பெரிய சத்தியத்தை நோக்கமாகக் கொண்டு உத்தம அப்போஸ்தலர்கள் தங்கள் விசுவாசிகளை மனந்திரும்புதலிலும், உத்தமத்திலும், தூய்மையிலும், இருதய சுத்தத்திலும், சகோதர அன்பிலும் நிலை நிறுத்தினார்கள்.

இரண்டாம் வருகையைப் போல பரிசுத்த நடக்கையை வலியுறுத்தும் வேத உபதேசம் இல்லவே இல்லை.

விழித்திருத்தல்:

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

....நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" மத்.24:42-44.

தெளிந்தவர்களாயிருத்தல்:

"இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்... ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்" 1 தெச.5:26.

"ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" 1பேதுரு1:13.

மனந்திரும்புதல்:

"ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" அப்.3:19-21.

உத்தமம்:

"வெகுநாளான பின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பி வந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து, ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்புவித்தீரே அவைகளைக் கொண்டு இதோ வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தால் அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்றான்" மத்.25:19-21.

கிறிஸ்துவைக் குறித்து வெட்கப்படக் கூடாது:

"ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும் போது வெட்கப்படுவார் என்றார்" மாற். 8:38.

லௌகீகம்:

"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? மனுஷகுமாரன்... அவனவன் கிரியைக் குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்" மத்.16:26-27.

சாந்தகுணம்:

"உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக. கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" பிலி.4:5

மாமிச ஆசை இச்சைகளை அழித்துப் போடுதல்:

"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" கொலோ.3:4,5.

துப்புரவாயிருத்தல்:

"நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்" பிலிப்.1:11.

பரிசுத்தமாக்குதலும் பரிசுத்த வாழ்வும்:

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" 1 தெச.5:23.

ஊழியத்தில் உத்தமம்:

"நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" 2 தீமோ.4:1-2.

கட்டளைகளை கைக்கொள்ளுதல்:

"எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியு பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையை சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்" 1 தீமோ.6:14.

மந்தைக்கு மாதிரி:

"உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்
Mobile : **95432 21008**
Whatsapp : **9489740295**
e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

"…. உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து ….." மத். 14:31

கைத்தூக்கி விடும் ஆண்டவர்

2023 ஆகஸ்ட் மாத பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடு துதிக்கிறேன். இம்மாதமும் பத்திரிகை வாயிலாக உங்களோடு சில வார்த்தைகளை பகிர்ந்து கொள்ள கிருபை செய்தமைக்காக ஆண்டவரை மகிமை படுத்துகிறேன்.

நம் ஆண்டவர் **கைத்தூக்கி விடும் தேவன்**. மத்தேயு 14:24-ல் சீஷர்கள் பிரயாணம் பண்ணின படகு எதிர் காற்றினால் எற்பட்ட அலைகளில் அலைவுபட்டது என்று வாசிக்கிறோம். இதே சம்பவம் மாற்கு 6:48 "காற்று அவர்களுக்கு எதிராயிருந்தபடியினால் அவர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை அவர் கண்டு," என்று வாசிக்கிறோம். நம்முடைய வாழ்கையிலும் எதிர்காற்று போன்ற பிரச்சனைகளினால் நாம் அலசடிபடும்போது, நடுகடலில் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை போன்றதான கடினமான வேளைகளில் நமக்காய் பரிதபிக்கும் ஆண்டவர் நமக்கு உண்டு. அது ஒருவேளை இராத்திரி நாலாம் ஜாம வேளையாயிருக்கலாம், எனக்கு என்ன சம்பவிக்குமோ, ஐயோ! என் வாழ்க்கை அமிழ்ந்து போகிறதே, எனக்கு உதவி செய்ய ஒருவரும் இல்லையே என்று அங்கலாய்க்கும் வேளையாயிருக்கலாம், நமக்காய் கல்வாரியில் தன் ஜீவனையும் துச்சமென்று எண்ணி மரித்த நம் ஆண்டவர் நம்மை தேடி வருவார்.

மத்தேயு 14:25-ல் இவ்வாறு வாசிக்கிறோம் " இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்".

அவர் கடலின்மேல் நடக்கிறதை சீஷர்கள் கண்டு கலக்கமடைந்து, பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு அவர்களோடு பேசி நான்தான் பயப்படாதிருங்கள் என்றார். பேதுரு அவரை நோக்கி: "ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வர கட்டளையிடும் என்றான்". நாமும் சில வேளைகளில் பேதுரு போல் நம்பிக்கையற்று போகிறோம். பேதுரு படகை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்; ஆண்டவரே என்னை ரட்சியும் என்று கூப்பிட்ட போது, "**இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து**" தூக்கினார். நாமும் நம்முடைய பிரச்சனைகளில் அவரை நோக்கி கூப்பிடுவோம். **கைத்தூக்கி விடும் நம் ஆண்டவர்** நம்மையும் தூக்கி கன்மலை மேல் நிறுத்துவார்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

கிறிஸ்துவுக்குள்,
W. சாமுவேல் பின்னி

⏪ ⏪ ⏪ உபவாச ஜெபம் குறித்து ⏩ ⏩ ⏩

ஜூன் மாத உபவாச ஜெபம் ராஜபாளையம் சிற்றி ஏ.ஜி. சர்ச்சில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியர் **வெஸ்லி தேவதாசன்** அவர்கள் சுகவீனமாயிருந்தபடியால் 7 மணி நேர உபவாச ஜெபம் நடத்த முடியாத சுழ்நிலையில், சபையின் போதகர் **A. அருள் சத்தியதாஸ்** கேட்டுக்கொண்டபடி நானும் போதகர் பிரகாஷ்-ம் நம்முடைய வாகனத்தில் புறப்பட்டோம். போதகர் அற்புதராஜ் ராஜபாளையம் அருகில் வில்லிபுத்தூரிலிருந்தபடியால் முன்பே சென்று ஆயத்த பணிகளை செய்தார்கள்.

2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

சரியாக 10.00 மணிக்கு சபை போதகர் ஜெபித்து உபவாச ஜெபம் ஆரம்பமானது. போதகர் **பிரகாஷ்** (J. S. Church, Parvathipuram, Nagercoil) பாடல் ஆராதனையை நடத்தினார்கள். 10.30 மணிக்கு நாங்கள் குழுவாக தரிசன பாடல் பாடிய பின்பு எழுப்புதலுக்காக இதய கதறல் உபவாச ஜெபம் குறித்த தரிசனத்தை வேதத்தில் காணப்படும் சில நபர்களை கோடிட்டு காட்டி தேசத்திற்காக நாம் திறப்பிலே நின்று ஜெபிக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினேன்.

11.30 முதல் 12.30 வரை போதகர் **அற்புதராஜ்** (நிம்ஸ் சபை, சுந்தரபாண்டியம்), எழுப்புதலுக்கான ஜெபத்தை நடத்தினார்கள். 12.30 மணிக்கு சிறப்பு செய்தி போதகர் **பிரகாஷ்** ஜெபத்தை குறித்து "**அவன் இப்போது ஜெபித்து கொண்டிருக்கிறான்**" என்ற தலைப்பில் கொடுத்து, ஜெபத்தில் நடத்தினார்கள்.

தொடர்ந்து ராஜபாளையம் சிற்றி ஏ.ஜி. சபைக்காக, போதகருக்காக பங்கு பெற்ற மக்களுக்காக, அந்த பட்டணத்திற்காக விசேஷ ஜெபத்தை ஏறெடுத்தேன். நிறைவாக 02.00 மணிக்கு சபை போதகர் உபவாச ஜெபம் குறித்து சில வார்த்தைளை கூறி, பெலவீனமாய் வீட்டிலிருந்த ஆசிரியருக்காக ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள்.

அனேகர் கலந்து கொண்டு வாஞ்சையோடு ஜெபித்தார்கள். திருச்சியிலிருந்து அருமையான போதகர் ஒருவர் உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள வந்திருந்தார். கர்த்தர் அவரை ஆசீர்வதிப்பாராக. உபவாச ஜெபம் முடிந்த பின்பு சிலர் வந்து ஏன் மாலை வரை நடத்தவில்லை, மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது என கூறினார்கள். தேவன் ஒருவரே மகிமைப்படுவாராக. இந்த உபவாச ஜெபம் ஒழுங்கு செய்ய உதவியாயிருந்த நம்முடைய வருகையின் தூதன் வாசகர், சகோ. ஜெயசீலன் குடும்பத்திற்காக தேவனை துதிக்கிறேன். கர்த்தர் அவரை ஆசீர்வதிப்பாராக.

சபையை ஜெபத்திற்கு திறந்து கொடுத்து, அனைத்து ஒழுங்குகளையும் செய்த சபை போதகர் **A. அருள் சத்தியதாஸ்,** விசுவாசிகள் மற்றும் உதவி செய்த யாவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். கர்த்தர் தாமே யாவரையும் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக.

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண் காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப் படும் போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" 1 பேது.5:2-4.

பரிசுத்தம்:

"பிரியமானவர்களே இப்பொ ழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக் கிறோம், இனி எவ்வித மாயிருப்போ மென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப் போமென்று அறிந்திருக்கிறோம். அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்து கொள்ளு கிறான்" 1 யோவா.3:2,3.

கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்:

"இப்படியிருக்க பிள்ளைகளே, அவர் வெளிப்படும் போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரிய முள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" 1 யோவா.2:28.

விசுவாசத்தின் சோதனைகளையும் பரீட்சைகளையும் சகித்தல்:

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாக காணப்படும்" 1 பேது.1:7

தூய சம்பாஷணை:

"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்.... பிரியமானவர்களே உங்களை போதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகை யாமல் கிறிஸ்துவின் மகிமை வெளிப் படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும் படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள்" 1 பேது.4:11-13.

சகோதர அன்பு:

"நாங்கள் உங்களிடத்தில் வைத் திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும் போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்து வாராக" 1 தெச.3:12,13.

விசுவாசத்தின் போராட்டத்தை போராடு:

"நல்ல போராட்டத்தைப் போரா டினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயதிபதியாய் கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளு வார்" 2 தீமோ.4:7,8.

கிரீடத்தைப் பற்றிக்கொள்:

"இதோ சீக்கிரமாய் வருகிறேன் ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு" வெளி.3:11.

தேவபயமின்மையை விட்டு விட்டு தேவ பயத்தோடு வாழுதல்:

"நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர் களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கி யத்துக்கும், மகா தேவனும் நமது இரட் சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" தீத்து.2:12,13.

தீமை வருகைக்கு விழிப்புடன் இருத்தல்:

"மின்னல் வானத்தின் ஒரு திசையில் தோன்றி மறுதிசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்" லூக்.17:24.

தீர்ப்பு சொல்லாதிருங்கள்:

"ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்" 1 கொரி.4:5.

களிகூருகிற காலத்தின் நம்பிக்கை:

"நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை யென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்..." பிலி.2:14.

அவர் தூரத்திலிருக்கும் போதும் ஆறுதல்:

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" யோவா.14:3.

அந்த நிகழ்வுக்காக நாம் காத்திருப்போம்:

"அவர் மரித்தோரிலிருந்தெழுப்பி னவரும், இனிவரும் கோபாக்கினை யினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கி றவருமாயிருக்கிற அவருடைய குமார னாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும் அறிவிக்கி றார்களே" 1 தெச.1:10.

நியாயத்தீர்ப்பு காலம்:

"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும் போது, தமது மகிமையுள்ள சிங்காசத்தின் மேல் வீற்றிருப்பார்.

அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படு வார்கள், மேய்ப்பனானவன் செம்மறி யாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து..." மத்.25:31,32.

பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல்:

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப் பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள்" 1 கொரி.15:22,23.

பரிசுத்தவான்களின் வெளிப்பாடு:

"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப் படுவீர்கள்" கொலோ.3:4.

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை குறித்த ஆறுதல்:

"அன்றியும் சகோதரரே நித்திரை அடைந்தவர்களின் நிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர் களைப் போல துக்கித்து அறிவில்லா திருக்க எனக்கு மனதில்லை... இயேசு வானவர் மரித்து எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம். அப்படியே இயேசு வுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் இயேசு அவரோடேகூட கொண்டு வருவார். ஏனெனில் கர்த்தர் தாமே... வானத்தி லிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். .... ஆகையால் இந்த வார்த்தைகளினாலே ஒருவரை ஒருவர் தேற்றுங்கள்" 1 தெச. 4:13-18.

அவிசுவாசிகளின் குழப்பத்தின் காரணம்:

"தேவனை அறியாதவர்களுக் கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படி யாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்." 2 தெச.1:7,8.

கர்த்தருடைய இராபோஜனத்தின் மூலம் அறிவித்தல்:

"ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" 1 கொரி.11:26.

சபையின் ஊழியம் இவ்வித மான ஆத்துமாவைத் தொடக்கூடியதும் அனைத்து அடிப்படை கிறிஸ்தவ

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விசுவாசங்களாகிய தூயவாழ்வு போன்ற செய்திகளை அளித்தால் நலமாயிருக்கும். இவைகளே ஆழமான பரிசுத்தம், ஆவிக்குரிய தன்மை போன்றவற்றிற்கு ஆதாரமாயிருக்கும்.

கலியாண வஸ்திரம் தரித்து

இரண்டாம் வருகைக்கான ஆயத்தங்களைக் குறித்து இயேசுவான வரும் அப்போஸ்தலரும் பல காரியங் களைக் குறிப்பிட்டும் வலியுறுத்தியு மிருக்கின்றனர். நாம் விழிப்புள்ளவர் களாகவும் ஆயத்தமாகவும் கலியாண வஸ்திரம் தரித்தவர்களாயும் இருக்க வேண்டும். நமது பாவங்களை அவருக்கு முன்பாக அறிக்கையிட வேண்டும். உலகீகத்தை மேற்கொள்ள உத்தம முழுமையான மனந்திரும்புதல் வேண்டும். தற்கால உலகில் சாந்தமும் பொறுமையுமுள்ளவர்களாயிருந்து மாம்ச இச்சைகளை அழிக்க வேண்டும். உத்தமமானவர்களாகவும் தேவபயமும் நீதியுமுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். அதோடு பரிசுத்தமுள்ளவர்களாயும் குற்றமில்லாதவர்களாயும் நேர்மை யுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். அவரது கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால் கிறிஸ்து வரப் போகிறார்.

உள்ளான போராட்டங்களால் சிதைந்திருக்கும் நமது இருதயங்கள் தூய்மையால் நிலைநிறுத்தப்பட வேண்டும். நாம் நிதானமுள்ளவர்களும், நமது நம்பிக்கைகளை தேவ கிருபையின் மேல் வைக்கிறவர்களும் சம்பாஷணை களில் தெய்வீக பயமுடையவர்களாயு மிருப்பதும் அவசியம். திராட்சைக் கொடி செடியில் நிலைத்திருப்பது போல நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.

நமது வாழ்வுகள் கிறிஸ்துவில் மூழ்கியிருப்பதால் தீமை நம்மில் படராமல் நம்மைப் பரிசுத்தமாகக் காத்துக் கொள்ள முடியும்.

நல்ல போர்ச்சேவகராக கடின மான பாடுகளையும் அக்கினி போன்ற சோதனைகளையும் விசுவாசத்தால் மேற் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மாதிரி யைப் பின்பற்றி சகோதர அன்பில் பெருக வேண்டும். பரலோகக் குடியிருப்பின் மேல் நம் மனதைப் புனிதமாகக் காத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் வருகை சமீபமாயிருப்பதால் பொருளாசை நிறைந்த உலகை விட்டு ஆண்டவரை நேசிக்கவும், அவரது வருகைக்காகக் காத்திருக்கவும் வேண்டும்.

கிறிஸ்துவின் வல்லமையில் பூரண நம்பிக்கை வேண்டும். அன்பின் பணியாளர்களாக இரத்தக்கிரயத்தால் காத்துக் கொள்ள வேண்டும். நமது நல்ல நாடு மேலேயிருக்கிறது. அந்த நகரத்தைக் கட்டியவர் கிறிஸ்து. எனவே நாம் நம்மைச் சுற்றியிருக்கும் பாவ பழக்கங்கள் உலகப் பாசத் தோட்டங்களில் மலரும் மலர்களின் வாசம் இவற்றை தவிர்த்து துரித நியாயத்தீர்ப்புக்கு எதிராக நம்மைக் காத்துக் கொள்வோம். அவர் தமது பரிசுத்த தூதர்களோடு வரப்போகிறார்.

போராடு, கடினமாக உழை, அன்பு செலுத்து

உலகபிரகாரமான வசதிகளில் எளியவர்களாகிய நாம் ராஜாதி ராஜா வின் கரத்திலிருந்து நல்ல பரிசினைப் பெற நம்பிக்கையோடு உழைக்க வேண்டும். மகிமையான சரீரத்தில் எழுந்திருப்போம் என்ற எண்ணத்தால் ஆறுதலடைய வேண்டும். கல்வாரியி லிருந்து பாய்ந்தோடும் இரத்தத்தால் துவைக்கப்பட்ட வஸ்திரத்துடன் ஆயத்த மாயிருக்க வேண்டும். தெய்வீக புதிய ஒளிக்குள் இரட்சிப்பால் கொண்டு வரப் பட்ட நாம் வல்லமையுள்ள தேவனுடைய சந்ததி. வழிகாட்டும் ஒளியாக வல்லமை யாகப் பிரகாசிக்க வேண்டும். அன்பில் பெருகவும் கிறிஸ்துவின் ஆழமான அறிவைப் பெறவும், பரலோகத்தையே ஏறிட்டுப் பார்க்கவும் 'நீதியின் சூரியனுக் காகக்' காத்திருக்கவும் அழைக்கப்படுகி றோம். நம்பிக்கையுடன் விசுவாசக் கேடயத்தைப் பிடித்துக் கொண்டு போரிடவும் உழைக்கவும் அன்பு கூறவும் கடவோம். கர்த்தர் திருடனைப் போல இரவில் வரவிருக்கிறார்.

இதைப் பிரசங்கிப்போம். நமது செய்திகள் இந்த விலையேறப் பெற்ற சத்தியத்தால் உறுதிப்படுத்தப்படட்டும். நமது பாடல்கள் தெய்வீக இனிய பாடல்களாக மாறட்டும்.

இந்தக் கடைசி நாட்களில் மனப்பூர்வமாகவும் விழிப்பாகவும் இருப்போம்

Serious and watchful in these last days.

Rich Carmicheal

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீப மாயிற்று. ஆகையால் புத்தியுள்ளவர்க ளாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக் கிரதையுள்ளவர்களாயிருங்கள்" *1பேது.4:7.*

இந்தக் காலம் பயத்துடன் விழிப்பாயிருக்க வேண்டிய காலம். ஜெபம் மிகவும் அவசியமாயிருக்கிறது. காலத்தின் அடையாளங்கள் நாம் கடைசிக் காலத்தில் இருப்பதையும் இரட்சகரின் வரவு அதிசீக்கிரம் என்ப தையும் காண்பிக்கின்றன. ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனை களுக்கு ஆரம்பம் என்று இயேசு *மத்.24:7,8* வசனங்களில் முன்னதாக குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து *9-12* வசனங்களில் பாடுகள், பகை, ஏமாற்றம், அராஜகம் இவைகளோடு அனேகருடைய அன்பும் தணிந்து போவதாகக் குறிப்பிட் டுள்ளார்.

இந்த அடையாளங்கள் நமது நாட்களின் செய்திகளோடு ஒத்துப் போகின்றன. நாடுகளுக்கிடையேயான இழுவிசைகள், யுத்தங்கள் போன்ற வையும் ரஷியா உக்ரைன் போர் மூலம் ஏற்பட்டுள்ள கவலை மட்டுமல்ல, சீனா தைவானை முற்றுகையிட்டு அதன் மூலம் உலகிலே ஏற்படுத்தப் போகும் தாக்கமும் பேராபத்துகளைக் காண்பிக் கின்றன. ஈரான் நியூக்ளியார் ஆயுதங் களைத் தேடும் போது சமீப எதிர் காலத்தில் இஸ்ரவேலுக்கும் உலகம் முழுவதற்கும் என்ன பிடிப்பு இருக் கிறது? சமீபத்தில் சொல்லப்பட்ட ஒரு செய்தியின்படி "இஸ்ரவேல் ஈரானை மிகப் பெரிய பகைவனாகக் கருதுவ தாகவும், பிரதம மந்திரியான பெஞ்சமின் நெடான்யாஹூ ஈரான் நியூக்ளியார் ஆயுதத்தினை உருவாக்க விடுவதில்லை என்று மறுபடியும் மறுபடியும் கூறுகிறார்" என்று சுட்டிக் காண்பிக்கப்படுகிறது.

பட்டினி, பஞ்சம், கொள்ளை நோய், பூமியதிர்ச்சி, இயற்கை சீற்றம் என பல மில்லியன் குடும்பங்கள் கஷ்டப்படுகிறார்களே. இவைகளெல் லாம் அதிக அளவில் நடைபெறுவதும் அவற்றின் கொடுமை அதிகரிப்பதும் அவை அடிக்கடி நடப்பதும் நாம் பார்த்து கொண்டிருக்கிறோம்.

சன்மார்க்க நிலையிலும் இவ்வளவு துரிதமாக பாரம்பரிய மதிப்புகள் கீழ் இறங்கியதை மனோ பாவனை செய்ய முடியுமா? வெறுப் புணர்வு, ஏமாற்றம், அராஜகம் மற்றும் சன்மார்க்க சீரழிவு ஆகியவை இந் நாட்களின் அடையாளங்கள் ஆகி விட்டன. ஃபிராங்க்ளின் கிரஹாம் என்பவர் சமீபத்தில் பகிர்ந்து கொண்டது போல "உலகம் மிக வேகமாக அமிழ்ந்து கொண்டிருக்கிறது. நரகத்திலுள்ள எல்லா பிசாசுகளும் அவிழ்த்து விடப்பட்டது போல தோன்றுகிறது". அவர் ஒரு புயல் வருவதாக எண்ணி எச்சரிக்கிறார். "நாம் ஏமாற்றப்படவோ முட்டாள்களாக்கப் படவோ முடியாது. நாம் தயாராகி ஆயத்தமாக வேண்டும்".

கவலைக்கிடமான இன்னொரு விஷயம் செயற்கை புத்தி கூர்மை (Artificial Intelligence AI) சக்தி வாய்ந்த எந்திரவியல் நல்ல பலன்களை வாக்குப் பண்ணி னாலும் வரப்போகிற ஆபத்துகளின் முழு வலிமையினை யார் அறிவார்?

இந்த இதழைக் குறித்து

இந்த இதழிலுள்ள செய்திகள் உங்களைத் தூண்டி உற்சாகப்படுத்தி வரும் நாட்களுக்காக உங்களை ஆயத்தம் பண்ணக்கூடும். முக்கிய செய்திகள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாவதும், தெய்வ பயத்தோடு வாழ்வதின் அவசியமுமாகும். அப்

(5-ம் பக்கம் பார்க்க)

"உலகம் மிக வேகமாக அமிழ்ந்து கொண் டிருக்கிறது. நரகத்திலுள்ள எல்லா பிசாசு களும் அவிழ்த்து விடப்பட்டது போல தோன்றுகிறது".

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போஸ்தலனாகிய பவுல் தீத்து 2:12,13 வசனங்களில் குறிப்பிடுவது போல "நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்திருக்கும்படி நமக்குப் போதிக்கிறது".

இன்னொரு முக்கியமான செய்தி 'இந்தக் கடைசி நாட்களில் ஊழியம் செய்வதின் முக்கியத்துவம், நாம் உலகத்துக்குரியவர்களாயிராமலிருந்தாலும் இந்த உலகில் ஒளியாக உப்பாக வாழ்ந்து, கர்த்தரின் அன்பையும் அவரது வார்த்தைகளையும் பகிர்ந்து கொள்வது அவசியம்.' நம்மைச் சுற்றிலும், மக்களின் நித்திய நல்வாழ்வு ஆபத்திலிருக்கிறது. எனவே தேவன் நமது கரத்தில் தந்திருக்கும் பணியினை முழுமூச்சுடன் செய்வது இன்றியமையாதது. ஜெபத்தின் மூலம் வழிந்தோடும் தேவ ஆவியையும், அன்பையும், வல்லமையையும், ஞானத்தையும், தைரியத்தையும், திடனையும், விடா முயற்சியையும் பெறலாம்.

கர்த்தர் உங்களை ஆழமாகத் தொட்டு உங்கள் வாழ்வும் ஊழியமும் ஆசீர்வதிக்கப்படச் செய்வாராக. "அல்லாமலும் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலை சிலர் விட்டு விடுகிறது போல் நாமும் விட்டு விடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம் நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்".

அவர் வரும் வரை அவரைத் தேடுங்கள்

SEEK HIM TILL HE COMES

Rich Carmicheal

ஓசியா என்பவன் இஸ்ரவேல் மக்கள் மிகப் பெரிய ஆவிக்குரிய, சன்மார்க்க மற்றும் அரசியல் வீழ்ச்சியில் இருந்த போது தீர்க்கனாக இருந்தார். அந்த சூழ்நிலையை உருவகமாக்க தேவன் அதிகப்படியான காரியத்தை கூறினார். "நீ போய் ஒரு சோர ஸ்திரீயையும் சோர பிள்ளைகளையும் உன்னிடமாக சேர்த்துக் கொள் தேசம் கர்த்தரை விட்டு விலகி சோரம் போயிற்று." (ஓசியா 1:2) இதை விட மிக மோசமான வார்த்தைகளால் தம் மக்களை குற்றச்சாட்ட முடியுமா?

ஆண்டவர் தமது ஜனத்தை நேசித்தும் பராமரித்தும் நன்மைகளை பகிர்ந்தளித்தும் அவர்கள் அவரை விட்டு விட்டு வேறு தேவர்களை தேடி ஓடினார்கள். "அவள் பாகால்களுக்கு தூபங்காட்டி தன் நெற்றி பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னை சிங்காரித்துக் கொண்டு தன் நேசரை பின்தொடர்ந்து, என்னை மறந்து போன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்". (ஓசியா:2:13) அந்த ஜனங்கள் எல்லா குற்றங்களுக்கும் ஆளானார்கள். ".....தேசத்திலே உண்மையுமில்லை இரக்கமுமில்லை தேவனை பற்றிய அறிவுமில்லை பொய்யாணையிட்டு பொய் சொல்லி கொலை செய்து திருடி விபசாரம் பண்ணி மிஞ்சி மிஞ்சி போகிறார்கள். இரத்தபழிகளோடே இரத்தபழிகள் சேருகிறது". "அவர்கள் எவ்வளவாய் பெருகினார்களோ அவ்வளவாய் எனக்கு விரோதமாய் பாவம் செய்தார்கள்". (ஓசியா:4:7) "அநியாயத்தை உழுவீர்கள் தீவினையை அறுத்தீர்கள் பொய்யின் கனியை புசித்தீர்கள் உங்கள் வழியையும் உங்கள் பராக்கிரமசாலிகளின் திரளையும் நம்பினீர்கள்". (ஓசியா:10:13) அவர்கள் பெருமை நிறைந்தவர்களாய் தேவனை விட்டு தூரம் போனார்கள். "தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள். திருப்தியான பின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று அதனால் என்னை மறந்தார்கள்". (ஓசியா 13:6)

எனவே ஆவிக்குரிய விபசாரத்தின் இந்த நிலையை விவரிக்க ஆண்டவர் ஓர் ஒப்புவமையை உபயோகித்தது ஆச்சரியம் அல்ல. அதோடு இந்த உறவின் மூலம் கிடைத்த பிள்ளைகளுக்கு பெயரிடவும் கூறப்படுகிறது. முதல் மகனுக்கு யெஸ்ரயேல் என்று பெயரிடக் கூறப்பட்டது. அதன் பொருள் "தேவன் விதைக்கிறார் அல்லது தேவன் சிதறடிப்பார்" என்பதாகும். இந்த பெயர் இஸ்ரவேலருக்கு தேவன் திட்டம் பண்ணின தீர்ப்பைக் காட்டுகிறது. "இன்னும் கொஞ்ச காலத்திலே நான் ஏகூவின் வம்சத்தாரிடத்திலே யெஸ்ரயேலின் இரத்தப்பழியை விசாரித்து இஸ்ரவேல் வம்சத்தாரின் ராஜ்யபாரத்தை ஒழியப் பண்ணுவேன்". (ஓசியா:1:4) அடுத்த பெண் குழந்தைக்கு லோருகாமா என்று பெயரிடக் கூறப்பட்டது. அதன் பொருள் நேசிக்கப்படாதவள் என்பதாகும். "நான் இனி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கம் செய்வதில்லை. நான் அவர்களை முழுவதும் அகற்றி விடுவேன்". அடுத்த குமாரனுக்கு லோகம்மீ என பெயரிடக் கூறப்பட்டது. அதன் பொருள் என் ஜனமல்ல என்பதாகும். "ஏனெனில் நீங்கள் என் ஜனமல்ல நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை". (ஓசியா1:9)

சூழ்நிலை சிக்கலாயிருந்தது "அவர்கள் கர்த்தரைத் தேடும்படி தங்கள் ஆடுகளோடும் தங்கள் மாடுகளோடும் போவார்கள் அவரை காணமாட்டார்கள் அவர் அவர்களை விட்டு விலகினார்". (ஓசியா 5:6) எனவே ஓசியா பலத்த நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது வருவதாகக் கூறுகிறார். "அவர்கள் பொல்லாப்பை எல்லாம் நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்திக்கிறதில்லை. இப்போதும் அவர்களுடைய கிரியைகள் அவர்களை சூழ்ந்து கொண்டிருக்கிறது. அவைகள் என் முகத்துக்கு முன் இருக்கிறது".

வெறுப்புணர்வு, ஏமாற்றம், அராஜகம் மற்றும் சன்மார்க்க சீரழிவு ஆகியவை இந்நாட்களின் அடையாளங்கள் ஆகி விட்டன.

ஆனாலும் பெரிய நம்பிக்கை உண்டு

ஓசியா காலத்தில் தேவஜனம் நம்பிக்கையற்றிருந்தது. ஆயினும் ஓசியாவின் செய்தி நம்பிக்கையளித்தது. எப்படியெனில் கர்த்தரின் இருதய வாஞ்சை அவரது ஜனங்கள் நியாயத் தீர்ப்பை அல்ல அவர்கள் மனந்திரும்பவும் ஆவியின் நிறைவைக் கொடுக்க அழைப்பதாகவும் இருந்தது. "நீங்கள் நீதிக்கென்று விதையை விதையுங்கள் தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள். உங்கள் தரிசு நிலத்தை பண்படுத்துங்கள். கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரை தேட காலமாயிருக்கிறது". (ஓசியா 10:12) நீதிக்கென்று விதைத்தால் இரக்கத்தில் அறுவடை செய்வோம். நமது தரிசு நிலத்தை பண்படுத்தி அவரைத் தேடினால் அவர் நீதியைப் பொழிய பண்ணுவார். தேவன் வருவார் ஓசியா 6:3-ல் சொல்லியிருக்கிறபடி அவர் மழையைப் போலவும் பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் வருவார்.

தேவன் வரும் போது தனி நபர்கள், சபைகள், சமூகங்கள் மற்றும் சங்கங்களிலும் அற்புதமான மாற்றங்கள் நடைபெறும். அவர் வல்லமையோடும், தூய்மையோடும், சத்தியத்தோடும், பாவ உணர்வோடும், இரட்சிப்பு, ஜீவன், சமாதானம், சந்தோஷம் இன்னும் பல நற்பண்புகளுடனும் வருவார். நாம் என்ன எண்ணினாலும் தேவன் வரும் போது இது சாத்தியமாகும்.

ஏலியனார் மெக்கின்னே என்ற ஒரு போதகரின் மனைவி 1960, 1970-களில் நடைபெற்ற சக்தி வாய்ந்த எழுப்புதல்களைக் குறித்து "நாற்பது ஆண்டுகளுக்குப் பின் குளிர்ந்த பனிப் போல் புத்துணர்வை அளித்தது" என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார். அதில் "ஒருவருடைய மனதை கவரும் நிகழ்வுகள் நாற்பது வருடங்கள் கழிந்தாலும் அவற்றின் அழுத்தங்கள் நேற்று நடந்தது போலவே தோற்றமளிக்கின்றன". நீங்கள் பரலோகம் அனுப்பும் எழுப்புதலை பெற்றால் இப்படியே கூறுவீர்கள். உங்கள் வாழ்க்கை முந்தியது போல் இருப்பதில்லை.

இத்தகைய அனுபவத்தை பெற நாமும் வாஞ்சிக்க வேண்டாமா? ஏசாயாவோடு சேர்ந்து "தேவரீர் வானத்தை கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப் போலவும், அக்கினி தண்ணீரை பொங்கப் பண்ணுமாப் போலவும் பர்வ

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்கு முன்பாக உருகும்படி செய்யும்" (ஏசாயா 64:1) என்று சொல்ல வேண்டாமா? அது நமது வாஞ்சையாக இருந்தால் நாம் நீதிக்கென்று விதை விதைப்போம். மனந்திரும்பினால் மட்டும் போதாதது. நீதியின் மழையை அவர் வந்து பொழியும் மட்டும் அவரைத் தேட வேண்டும்.

அல்பரி அருள்மாரி

அல்பரி பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடைபெற்ற எழுப்புதலை "அருள்மாரி"யை நன்றியுடன் நினைவுக் கூர வேண்டும். 16 நாட்கள் நடந்த கூடுகையில் அநேக மாணவர்கள், அமெரிக்காவிலிருந்து வந்தவர்கள், பிற நாட்டவர்கள் அனைவரும் தாக்க மடைந்தார்கள். இந்த நெருப்பு பிற இடங்களிலும் பரவவும் பெரிய எழுப்புதல்கள் ஏற்படவும் ஜெபிப்போம்.

"உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களை திரும்பவும் உயிர்ப்பிக்க மாட்டீரோ கர்த்தாவே உமது கிருபையை எங்களுக்கு காண்பித்து உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளி செய்யும். கர்த்தராகிய தேவன் விளம்புவதை கேட்பேன். அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார். அவர்களோ மதிக்கேட்டுக்கு திரும்பாதிருப்பார்களாக. நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி அவருடைய இரட்சிப்பு அவருக்கு பயந்தவர்களுக்கு சமீபமாய் இருக்கிறது" (சங்கீதம் 85:6-9)

"எப்போதுமே; எல்லாமே உமக்கு மாத்திரமே"

(பிரான்சிஸ் றிட்லே ஹாவர்கால் என்பவரது வாழ்க்கை)

"Ever, only All for Thee" - The life of Francis Ridley Havergal

James Gilchrist Lawson

பிரான்சிஸ் றிட்லே ஹாவர்கால் "எந்தன் ஜீவன் இயேசுவே சொந்தமாக ஆளுமே" என்ற பாடலையும் பிற பாடல்களையும் எழுதியவர்கள். அவர்களுடைய பாடல்களாலும் தெய்வீக பணிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அனேகர். அனேக தேவ பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் வலுவடைய அவர்களது சிறு புத்தகங்கள் வழி வகுத்துள்ளன. அவர்களுக்கு கிறிஸ்து "வாழும் பிரகாசமான உண்மையும்" "உலகின் எந்த இணைப்பிலும் மிகவும் அன்பும் அதிக நெருக்கமும் இனிமையுமானவர்".

"எனது பாதையின் ஒவ்வொரு படியிலும் அவரை மகிமைப்படுத்த விரும்பினேன்" என்பது அவர்களது கூற்று. அனேக கிறிஸ்தவர்கள் அவர்களது உயர்வான சந்தோஷமும் சமாதானமுமான வாழ்வின் இரகசியத்தை அறிந்து அப்படி வாழ உத்தமமாக வாஞ்சிக்கின்றனர்.

வீடும் கல்வியும்

1836-ம் ஆண்டு இங்கிலாந்தில் ஒரு கல்லூரித் தலைவரின் ஆறு குழந்தைகளில் இளையவளாகப் பிறந்தார். மிகவும் அழகானவர். சிறுவயதிலேயே கும்மாளமடிப்பதிலும் மரங்களில் ஏறுவதிலும் விருப்பம் உடையவர். மூன்று வயதிலேயே எளிமையான புத்தகங்களை படிக்கும் திறமையுடையவர். நான்கு வயதிலே நன்கு எழுதவும் வேத புத்தகத்தினை வாசிக்கவும் கூடியவராயிருந்தார். தகப்பனார் சிறந்த இசை பாடல் இயற்றக் கூடியவர். ஒன்பது வயதில் இவள் நீண்ட கடிதங்களை நண்பர்களுக்கு பூரண எதுகையுடன் எழுதுவது வழக்கம்.

சிறுபருவத்திலேயே பாடல்களை இனிமையாகப் பாடுவாள். தந்தை வேத புத்தகத்தை வாசிக்கும் போது அவர் மடியில் உட்கார்ந்திருப்பாள், ஆனால் ஆறு வயது வரை மார்க்க சம்பந்தமான எந்த எண்ணங்களும் அவளுக்கிருக்க வில்லை. ஒரு பிரசங்கத்தின் மூலம் நரகத்தின் பயங்கரம், நியாயத்தீர்ப்பு ஆகியவைகளை அறிந்து கொண்டு பாவ உணர்வு அடைந்தாள். அவள் அதைக் குறித்து யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் அந்தப் பிரசங்கம் இரவும் பகலும் அவள் உள்ளத்தில் தொனித்துக் கொண்டிருந்தது. ஜெபத்தின் மூலம் விடுதலை பெற விரும்பினாள்.

இரண்டு ஆண்டுகள் யாருடனும் இதைக் குறித்துச் சொல்லாதபடி கவலையோடிருந்தாள். பின்பு இங்கிலாந்து திருச்சபையின் ஒரு குருவிடம் சொல்லத் துணிந்தாள். அவர் அளித்த பதில் அவளுக்கு திருப்தியளிக்கவில்லை. அதினால் சுமார் 5 வருடங்கள் தன் இருதயத்தை யாரிடமும் திறந்து பேசவில்லை. ஆனால் தன் ஆத்துமாவைப் பற்றிய ஆழமான கரிசனை அவளுக்கிருந்தது.

பன்னிரண்டாம் வயதில் அவள் தன் தாயை இழந்தது அவளுக்கு ஒரு பலத்த அடியாக இருந்தது. பதின் மூன்றாம் பதினான்காம் வயதுகளுக்கிடையில் Mrs. ட்டீட் என்பவர்கள் நடத்திய பள்ளிக்குச் சென்றாள். அவர்கள் ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு நல்ல பெண்மணி அங்கு ஏற்பட்ட ஒரு எழுப்புதலினால் ஏறக்குறைய அனைத்து மாணவர்களும் கிறிஸ்துவுக்குள் திரும்பினார்கள். அனேக பெண் பிள்ளைகளின் முகங்கள் தெய்வீக ஒளியால் பிரகாசித்தது. இந்த அனுபவம் அவளை அதிகமான பாவ உணர்வுக்கு வழி நடத்தினபடியால் பாவ மன்னிப்புக்காக அதிகமாக ஜெபித்தாள்.

அனேக மாதங்கள் இவ்வாறு தேடிய பின் Mrs. ருக் என்பவர்களிடம் இதைப் பற்றிக் கூற துணிந்தாள். கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள எதையும் விட்டு விட அவள் ஆயத்தமாயிருந்தாள். "நீ ஏன் இரட்சகராகிய இயேசுவை உடனே விசுவாசித்து ஏற்றுக் கொள்ளக் கூடாது?" என அவர்கள் கேட்டார்கள்.

ஹாவர்கால் இப்படிச் சொல்லுகிறார்கள், "உடனே என்னில் நம்பிக்கையின் ஒளிக்கதிர் உண்டானது. அதனால் நான் மூச்சற்றுப் போனேன். என் இதயத்துடிப்பை நான் உணர முடிகிறது. நிச்சயமாக இயேசுவை நம்புகிறேன் என்றேன். மாடிக்குச் சென்று எனது அறையில் முழங்காலிட்டு இந்த திடீர் நம்பிக்கையை உணர்ந்து கொள்ள பிரயாசப்பட்டேன். இறுதியில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். என் ஆத்துமாவை இயேசுவுக்கு ஒப்படைத்து விட்டேன். அவரை நித்தியகாலமாக முழுவதுமாக நம்ப முடிந்தது". இவ்வாறு ஒரு முழுமையான இரட்சிப்பின் நம்பிக்கை ஏற்பட்டது.

உடனே அவள் இப்படி கூறுகிறாள் நான் என் ஆத்துமாவை ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்படைத்தேன். எந்த நடுக்கமும் பயமுமின்றி நான் சொல்லுகிறேன். அப்போது வானமும் பூமியும் எனக்குப் பிரகாசமாகத் தோன்றின. நான் ஆண்டவராகிய இயேசுவை நம்பினேன்.

அன்றிலிருந்தே அவள் நேர்மையான கிறிஸ்தவளாக வாழ முடிந்தது. மகத்துவமான கல்வியை இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பெற்று அழகிய நிறைவடைந்த வாலிபப் பெண்ணாக வளர்ந்தாள். அனேக உயர் விருதுகளைப் பெற்று மேலும் மேலும் மேன்மை பெற்றாள். லத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் எபிரெயம் போன்ற மொழிகளிலெல்லாம் தேர்ச்சி பெற்றாள்.

இசையில் தேர்ச்சி பெற்றவளாகவும் சிறந்த பாடகியாகவும் தரமான கவிதைகளை எழுதுகிறவளாகவுமிருந்தாள். ஜெர்மனியில் அவளது பள்ளியில் படித்த நூற்றுப்பத்து இளம் பெண்களில் அவள் ஒருத்தி தான் கிறிஸ்துவுக்காக உறுதியாக நின்றாள். இதனால் பல பாடுகளை அனுபவித்தாலும் சில பள்ளி மாணவிகளை ஆதாயம் பண்ண முடிந்தது.

ஆவியால் நிரப்பப்படுவதற்கான வாஞ்சை

பக்தியுள்ள கிறிஸ்தவளாக வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்தவும் ஓய்வுநாள் வேதபாட வகுப்புகளை நடத்தவும் ஆரம்பித்தாள். ஆராதனைகளில், வேறு இடங்களில் தேவையைப் பொறுத்தும் பாடி ஆண்டவரை மகிமைப்படுத்தினாள். ஏழைகளை சந்தித்தாள். வேத வசனத்தின் ஒரு சிறந்த மாணவியாக இருந்தாள். இருபத்தி இரண்டாம் வயதில் சுவிசேஷங்கள் முழுவதையும், நிருபங்களையும், வெளிப்படுத்தின விசேஷத்தையும், சங்கீதங்களையும், ஏசாயாவையும் மனப்பாடம் பண்ணிவிட்டாள். சிறிய தீர்க்கதரிசன புஸ்தகங்களைப் பின் நாட்களில் கற்றுக் கொண்டாள். அவள் எழுதினவைகளை ஆண்டவரே வழி நடத்தவும் அவளது கவிதைகளில் ஒழுங்கினை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரே கொடுக்கவும் ஆண்டவரிடம் கேட்டாள். அவளது படைப்புகள் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. அவளது இனிய கிறிஸ்தவ வாழ்வு எல்லாராலும் பாராட்டப் பட்டது.

இன்னும் அதிக ஆழமான முழுமையான கிறிஸ்தவ வாழ்வை அவள் வாஞ்சித்தாள். ஆவியால் நிரப்பப்பட்டு தேவனோடு நெருங்கி நடக்க அவள் விரும்பினாள். 1858-ல் 'Gleams and Glimpses' என்ற நூலை எழுதினாள். அதில் "சந்தோஷத்தாலும் பரிசுத்த ஆவியாலும் நிரப்பப்படுவது எத்தனை மேலானது! நான் ஏன் அவரை முழுவதுமாக நம்ப இயலாது?" என்று குறிப்பிடுகிறாள்.

பின்பு அவள் இவ்விதமாக எழுதுகிறாள், "நான் இன்னும் இன்னும் நேரடியாக அவரை எனக்கு வெளிப் படுத்தும் சமயத்தை விசுவாசிக்கக் காத்திருக்கிறேன். அந்தக் காத்திருப்பு இளைப்பாறுதலற்றதும் கவலையும் ஆபத்தும் நிறைந்ததல்ல, அமைதியான தற்கால நம்பிக்கையுடன் கூடிய காத்திருப்பு". 1858-ம் ஆண்டில் தனது இருபத்தி இரண்டாம் வயதில் 'நான் என் வாழ்வை உமக்குப் படைத்தேன்' என்ற புகழ் பெற்ற பாடலை எழுதினாள். அப்பாடல் அவரது ஆழமான இருதய வாஞ்சை இன்னும் முற்றிலும் ஒப்படைக்கப்படுவதைக் காண்பிக்கிறது.

1865-ல் "நான் எனது பயணத்தில் ஒரு விதமான பீடபூமியை அடைந்து விட்டேன் என்று நம்பினேன். அங்கு சிறிது நேரம் வெளிச்சத்திலும் களைப் பூட்டும் அடுத்தடுத்த பாறை பள்ளங்க ளின்றியும், செங்குத்தான பாறைகள், சதுப்பு நிலங்களின்றியும், இடறுதலும் கடினங்களுமின்றி சுமந்து செல்லப் படுகிறேன். எனது துன்பங்களுக்கும் தனிமைக்கும் காரணம் நான் நிபந்தனை யற்ற அர்ப்பணம் செய்யாததுதான். அதைச் செய்யுமட்டும் எனக்கு சமாதானம் கிடைப்பதில்லை என்பது நிச்சயம்" என்று எழுதினாள்.

பின்பு "எப்படியாயினும் நிச்சய மாக பரிசுத்தப்படுத்தி வெண்மையாக்கு வார்" என்று குறிப்பிடுகிறாள். ஒவ்வொரு நாளும் மூன்று முறை ஜெபிப்பது வழக்கம். ஒவ்வொரு காலையிலும் குறிப்பாக பரிசுத்த ஆவியானவருக்காக ஜெபிப்பாள். சில காலம் சுகவீனமா யிருந்த பின்பு, "அவர் என் எஜமானு டைய பயன்படும் பரிசுத்தமான பாத்திர மாக மாற்றுகிறார். எல்லா சோதனைகளை யும் பயிற்சிகளையும் இதே நோக்குடன் பார்க்கிறேன். அதனுடைய தாக்கம் ஒருவர் மீது எப்படி ஏற்பட்டாலும் ஆனால் அது என்னை என் எஜமானு டைய பணிக்கு தகுதிப்படுத்துகிறது. எனவே எந்த ஆவிக்குரிய வேதனை தரும் இருளிலும் போராட்டத்திலும் தேவன் என்னை நடத்துகிறார் என்று தேற்றப் படுகிறேன். நான் கஷ்டப்படும் தேவ பிள்ளைகளுக்கு ஒரு செய்தியாளனாக இருக்கலாம்" என்று எழுதினாள்.

"இருளில் நடக்கிற மக்கள் மேல் ஒரு உண்மையான பரிதாபம் கொள்ள நான் கற்றுக் கொண்டேன். அதனால் சில வேளைகளில் அவர்களுக்கு உதவி செய்யவும் ஏதுவாயிருந்தது" என்றும் அவள் எழுதினாள். அவளுடைய சோதனைகளைக் குறித்து: "விசேஷித்த காத்திருக்கும் காலமின்றி எவரேனும் தேவனால் உபயோகிக்கப்பட்டது உண்டா? பவுல் அரேபியாவின் பாலை வனங்களுக்குள் இருந்து எழுதிய நற்செய்திகள் இன்றுவரைக்கும் எத்தனை பயனுள்ளவைகளாயிருக்கின்றன?"

ஹாவர்கால் அதிகமான சமயத்தை வேதத்தைப் படிப்பதிலும் அடையாளமிடுவதிலும் செலவு பண்ணினாள். அது மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்வதற்கான வாஞ்சைகளை அதிகரித்தது. அது நம்மை திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாக்கு கிறது. (2 பேதுரு 1:4) அவள்: "இப்போது நான் அமைதியான மங்கலான ஒளியின் சந்தோஷத்தில் அவரது வாக்குத்தத்தங் களை பெற்று வருகிறேன். ஆனால் தெளிவான ஒளியின் முழுமையான அழகுடனும் மதிப்புடனும் அவைகளை நான் பெற்றுக் கொள்ள காத்திருக் கிறேன்" என எழுதினாள்.

முழுமைக்குள் கொண்டு வரப்பட்டாள்

இறுதியாக அவள் நீண்ட காலமாக எதிர்பார்த்த அனுபவம் ஏற்பட்டது. அது அவளது வாழ்வை சூரிய ஒளிக்குள்ளும் சந்தோஷத்திற் குள்ளும் எடுத்துச் சென்றது. அவளது சகோதரியான மரியா இப்படி அதனைக் குறித்து எழுதுகிறாள்.

அன்பான பிரான்சிஸ்னுடைய வாழ்வில் ஏற்பட்ட உன்னதமான ஆத்தும ஆசீர்வாதத்தினைக் கண்டோம். 1873-ம் ஆண்டு நிறைவடையும் காலமா யிருந்தது. அவள் வின்டர்டைன் என்னு மிடத்தை சந்தித்தாள்.

ஒரு நாள் அவள் ஒருவரிட மிருந்து கடிதம் மூலமாக ஒரு சிறு புத்தகத்தை பெற்றுக் கொண்டாள். அதன் தலைப்பு '**எல்லாம் இயேசுவுக்கே**' என்பதாகும். அதை அவள் கவனமாக வாசித்தாள். அதன் உள்ளடக்கம் அவளுடைய கவனத்தைக் கவர்ந்தது. அது ஒரு அதிகப்படியான கிறிஸ்தவ அனுபவத்தை அளித்தது. அவள் அனேக வருடங்கள் ஆண்டவரை நேசித்து அவர் சேவையில் மகிழ்ந்திருக்கிறாள் என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்தாள். ஆனால் பரிசுத்தமான நடை, சம்பாஷணை இவற்றில் குறைவு இருந்தது. தெய்வீக வாழ்வில் தொடர்பான பிரகாசமும் சந்தோஷமும் இருக்கவில்லை. 'எல்லாம் இயேசுவுக்கே' என்ற புத்தகத்தின் மூலம் அவள் வாழ்க்கையில் தேவையாயிருந்த வைகளையும் வாஞ்சைகளையும் அறிந்து கொண்டாள்.

இப்புத்தகத்தினை எழுதிய ஆக்கியோனுக்கு இவ்வாறு பதில் அனுப்பினாள்: யோவா.14:21-ல் காணப் படும் முழுமையான உணர்வைப் பெறும்படி இன்னும் அவரண்டை வர விரும்புகிறேன். அவரது உயிர்த்தெழு தலின் வல்லமையை அறிய அவருடைய பாடுகளை அனுபவிப்பதானாலும் பரவாயில்லை. இவை யெல்லாம் என்னுடைய சந்தோஷத்திற்காக மட்டு மல்ல மற்றவர்களுக்காகவும் தான். இயேசு என்னிடம் 'அனேக காரியங் களைப்' பேச வேண்டும். அவைகளை நான் உண்மையான வல்லமையுடன் பேச முடியும். தத்துவங்களை அறிந்து கொள்வதல்ல அவரோடு இருப்பது தான் இந்த அனுபவத்தைத் தரும்.

அவளது சமாதானமும் சந்தோஷ மும் ஆழமாகவும் பரந்தும் ஓடின. அவள் பெற்ற ஆசீர்வாதம் அவளது வாழ்வை முழுமையான மகிமைக்கு மென்மேலும் வழி நடத்தியது.

சந்தோஷமான வாழ்வும் சேவையும்

அவளது தினசரி வாழ்வு உத்தமும் முழுமையுமான இருதயத்தோடு இயேசு ராஜாவை சேவிப்பதாயிருந்தது. அவளது வாழ்வில் சந்தோஷமும் கீழ்ப்படிதலும் நிறைந்திருந்தது.

சில மாதங்களுக்குப் பின் சகோதரி மரியாவுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறாள். "ஆத்துமா கிறிஸ்துவின் இரத்தத்தின் முழு வல்லமையின் கீழ்வரும் போது பாவ மெல்லாம் கழுகப்படுகிறது. ஆனால் கண்ணிமைக்கும் நேரம் அந்த வல்லமை யிலிருந்து விலகினாலும் மறுபடியும் பாவம் வருகிறது. தேவ வல்லமை ஒன்றே அவருக்கு எதிராக நாம் பாவம் செய்யாமல் பாதுகாக்கிறது".

தூய ஆவியாவரால் தெளிக்கப் படும் விலையேறப் பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தின் சுத்திகரிக்கும் வல்லமை யையும் பாதுகாக்கும் தேவ வல்லமை யையும் நாம் அற்பமாயெண்ண வில்லையா? 1 யோவா.1:7 வசனத்தை பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக பயன்படுத்தி, எல்லாப் பாவங்களி லிருந்தும் நம்மை சுத்திகரிக்கிறது என்பதை விட்டு விடுகிறோமா? எல்லாம் என்பது எல்லாப் பாவங்களையும் அடக்குகிறது. அதை அதன் முழுமை யோடு ஏற்றுக் கொள்வோம். இல்லா விட்டால் சர்வ வல்லவரின் வல்லமையை நாம் கட்டுப்படுத்துகிறோம்.

அவரால் கூடாதது எது? 'கழுகி சுத்திகரிக்கும்' என்பது நம்பிக்கை சந்தோஷம் என்பவற்றின் மகிமையா யிருக்கிறது. அவரது இரத்தம் சுத்தி கரித்துக் கொண்டேயிருக்கிறது. என் இருதயமும் மகிழ்ந்து களிகூர்ந்து கொண்டேயிருக்கிறது. அந்த ஊற்றில் நின்று கொண்டேயிருப்பேன்.

அவரது வாக்குத்தத்தங்களை ஏன் சந்தேகிக்க வேண்டும்? பிலிப்.4:19ன் 'நமது தேவை' என்ன? விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டு, இரட்சிப்பின் நம்பிக்கையைப் பெற்று, தேவ ஆவியால் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்டு, ஆண்ட

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வராகிய இயேசுவை துக்கப்படுத்தாமல், அவருடைய பரிசுத்த சித்தத்திற்கு எதிராக எதையும் செய்யாமலிருப்பதே, அவர் எல்லா தேவைகளையும் நிவிர்த்தி செய்கிறவர்.

எல்லாம் இயேசுவுக்கே எனும் போது கொடுக்கப்படாத பகுதி பாவம் என்பது தெளிவாகிறது. ஒரு நிமிட திகைப்பு, கீழ்ப்படிதலில் தணிவு ஏற்படும் போது ஐக்கியம் முறிந்து சந்தோஷம் இழந்து போகிறது. ஆயினும் விசுவாசம் உடனடியாக துளிர்த்து நீரூற்று திறந்து வல்லமையோடு சுத்திகரிப்பு ஆரம்ப மாகிறது.

மேலான நிலை

பின்வரும் காலங்கள் அவளது வாழ்விலும் சேவையிலும் பயனுள்ள நாட்களாக அமைந்தன. அவள் சென்ற இடமெல்லாம் சேவை நிறைந்ததும், ஆவிக்குரிய வல்லமை நிறைந்து மிருந்தன. இந்த காலத்தில் தான் அவள், 'எந்தன் ஜீவன் இயேசுவே சொந்தமாக ஆளுமே' என்ற பாடலை இயற்றினாள்.

இந்த அர்ப்பண பாடல் இயற்றப் பட்ட மூலகாரணத்தை அறிய விரும்பு வீர்கள். ஒரு சிறிய சந்திப்பிற்காக ஒரு இல்லத்தில் ஐந்து நாட்கள் தங்கியிருக்கும் படி சென்றேன். அந்த வீட்டில் பத்துப் பேர் இருந்தனர். சிலர் மனந்திரும்பாத வர்கள் நீண்ட நாட்களாக அவர்களுக் காக ஜெபித்துக் கொண்டிருந்தோம். சிலர் மனந்திரும்பியிருந்தாலும் களிகூரும் கிறிஸ்தவர்களல்ல. ஆண்டவர், 'இந்த இல்லத்திலுள்ள அனைவரையும் தாரும்' என்ற ஜெபத்தை எனக்குத் தந்தார் அப்படியே அவர் செய்தார். அந்த வீட்டிலிருந்து செல்லுமுன் எல்லோரும் ஒரு ஆசீர்வாதம் பெற்றனர். கடைசி இரவில் நான் அதிக சந்தோஷமாயிருந் தேன். இரவு முழுவதும் துதிப்பதிலும் என் அர்ப்பணத்தை புதிப்பதிலும் செலவு பண்ணினேன். இந்தப் பாடல் வரிகள் ஒன்றன்பின் ஒன்றாக முடிவுரை வந்து கொண்டேயிருந்தன.

இப்போது பரிசுத்த பாடல் களைத் தவிர எதையும் அவள் பாடுவ தில்லை. அவளது எழுத்துக்களும் குரலும் இயேசுவுக்கே எப்பொழுதுமாக அர்ப் பணிக்கப்பட்டு விட்டன. அவளது அர்ப்பண பாடல்களும் எழுதிய கட்டுரைகளும் அனேக உள்ளங்களைத் தொட்டன. அவள் தனது ஒவ்வொரு விநாடியையும் தேவனுக்குரியதாகக் கருதி அதை அவரது மகிமைக்காகவே செலவு பண்ணினாள்.

அவள் தனது ஒவ்வொரு காசையும் அவருடையதாகவே கருதி னாள். "இது அவருடைய காசு என்ற பிரத்தியேக எண்ணமும், அது அவரது மகிமைக்காகவே செலவு பண்ணப்பட வேண்டும் என்ற எண்ணமுமில்லாமல் ஒரு காசும் நான் செலவழித்ததில்லை" என்பது அவளது சட்டம். தனது நகை களையெல்லாம் மிஷனெறி பணிக்காக செலவு செய்து விட்டு எளிமையாகவும் ஆனால நேர்த்தியாகவும் ஆடைகளை அணிந்தாள். கிறிஸ்தவர்களது உடை ஒழுங்கீனமாகவும் மிதமிஞ்சினதாகவும் இருக்கக் கூடாது என்பது அவளது அபிப்பிராயம்.

அவள் எழுதுவதிலும், வேத வாசிப்பிலும், எளியவர்களை சந்திப் பதிலும் (Zenana) ஸனானா மிஷனுக்கும் ஏழைகளுக்கு தையல் வேலை செய்வ திலும் நேரத்தை பயன்படுத்தினாள். வீடுகளை சந்தித்து வேதத்தை வாசித்து அவர்களுக்குக் கிறிஸ்துவைக் காண் பிப்பது அவளது முழுநேர பணி.

காலைதோறும் தனது மேஜை முன் உட்கார்ந்து வேதத்தை வாசித்து அடையாளமிடுவாள். மிகவும் குளிரான நாட்களில் அவள் தன் கால்களை நெருப்பண்டை வைக்கும்படி கூறுவாள். அப்போது பதிலாக அவள், "நான் கண்டு பிடித்த விசேஷித்த வரிகளை நான் அடையாளப்படுத்த இப்படியே உட்காருவேன். வேத புத்தகத்தில் எத்தனை அசாதாரணமான விஷயங்கள் இருக்கின்றன" என்று பதிலளிப்பாள்.

உலகத்தில் பல பாகங்களிலு முள்ள அனேக மக்களுக்கு அவள் அனேக ஆறுதல் கடிதங்களை எழுதியுள்ளாள். அவளது புத்தகங்களும் சென்ற இடங்களி லெல்லாம் ஆசீர்வாதத்தை எடுத்துச் சென்றன. பிள்ளைகள் கூட்டமாக அவளிடம் வந்தனர். பெரியவர்களும் உலகின் பல பாகங்களிலுமிருந்து அவளோடு தொடர்பு கொண்டனர். காலையிலிருந்து இரவு வரை ஆண்ட வரது சேவையிலேயே ஈடுபட்டிருந்தாள்.

நோய்களால் உடல் நலன் பாதிக்கப்பட்ட போதும், பல இழப்புகள் வந்த போதும் அவள் இரட்சிப்பின் தேவனில் களிகூர்ந்தாள். (ஆப.3:18) அவளது புத்தகங்களை பிரசுரித்த அமெரிக்கர்கள் புத்தகங்களுக்கான பணத்தை கொடுக்காத போதும் "இருதயத்தின் சூரிய ஒளியில் பயமோ, சந்தேகமோ, கவலையோ, நிழலோ ஏற்படவில்லை" என்று கூறினாள். பின்பு அவளது பாடல்களின் இசைத்தட்டுகள் அக்கினியில் அழிந்த போது இந்த எதிரான காரியங்களை அனுமதிப்பதில் தேவனுக்கு ஒரு நோக்கமிருப்பதாக விசுவாசித்தாள்.

காலங்கடர கடர அவளது ஆரோக்கியம் குன்றியது. ஊழியத்திலே அவள் தன்னை இழந்து கொண்டிருந் தாள். நண்பர்கள் அவளது பாடுகளைப் பரிதாபத்துடன் பார்த்த போது அவள், "பரவாயில்லை! வீட்டிற்குச் செல்வது துரிதமாகட்டும். தேவ சித்தம் இனிமை யானது. அவர் ஒரு போதும் தவறு செய்வதில்லை" என்றாள்.

அவளது மரணத்திற்கு சற்று முன்பாக "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது" என்ற வசனத்தை தனது கல்லறை மீது எழுதும்படி சொன்னாள். அங்கு செல்வது எவ்வளவு அழகானது என்று அடிக்கடி கூறுவாள். இறுதியில், "அனைவரும் கிறிஸ்துவைக் குறித்து அழகாகப் பேசுங்கள். அதுவே பூரண சமாதானம். நான் இயேசு வந்து என்னை அழைத்துச் செல்ல காத்திருக்கிறேன்" என்று கூறி மரித்தாள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 7 மணி நேர உபவாச ஜெப ஊழியங்களை ஜெபத்தினாலும் உதாரத்துவமான தியாக காணிக்கை களினாலும் தாங்கின யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

ஆசிரியர் குறித்து

கடந்த மாத பத்திரிகையில் குறிப்பிட்டபடி ஆசிரியர் **வெஸ்லி தேவதாசன்** அவர்கள் **மேய்** மாதம் 14-ம் தியதி இரவு உடல் நல குறைவினால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 16-ம் தியதி வீடு திரும்பினாலும், தற்போது வரை வீட்டிலேயே மிகவும் பெலவீனமாய் இருக்கிறார்கள். அவருடைய பரிபூரண சுகத்திற்காக பாரத்தோடு தினமும் ஜெபிக்கும்படி அதிக பட்சமாய் கேட்கிறேன்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

கண்ணிமைக்கும் நேரம் அந்த வல்லமையிலிருந்து விலகினாலும் மறுபடியும் பாவம் வருகிறது. தேவ வல்லமை ஒன்றே அவருக்கு எதிராக நாம் பாவம் செய்யாமல் பாதுகாக்கிறது.

தேவன் வரும் போது தனி நபர்கள், சபைகள், சமூகங்கள் மற்றும் சங்கங்களிலும் அற்புதமான மாற்றங்கள் நடைபெறும்.

ஜெபத்தின் மூலம் வழிந்தோடும் தேவ ஆவியையும், அன்பையும், வல்லமை யையும், ஞானத்தையும், தைரியத்தையும், திடனையும், விடா முயற்சியையும் பெறலாம்.

இந்தக் கடைசி நாட்களில் ஊழியம் செய்வதின் முக்கியத்துவம், நாம் உலகத்துக் குரியவர்களாயிராமலிருந்தாலும் இந்த உலகில் ஒளியாக உப்பாக வாழ்ந்து, கர்த்தரின் அன்பையும் அவரது வார்த்தைகளையும் பகிர்ந்து கொள்வது அவசியம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason